# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. முதல் எழுத்துகள் ________________ .
   ( 12, 18, 30 )

2. இயல் இசை நாடகம் என்பன ________________ .
   ( முக்கனி, முத்தமிழ், முப்பால் )

3. திருகோணமலை ________________ த் திக்கில் அமைந்துள்ளது.
   ( வடக்கு, கிழக்கு, மேற்கு )

4. உடுக்கை என்பதன் பொருள் ________________ .
   ( ஆடை, குடை, படை )

5. 400 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________.
   ( நானூறு, நாநூறு, நாணூறு )

6. இராவணனது கொடி ________________ க் கொடியாகும்.
   ( மீன், புலி, வீணை )

7. ஒரு பக்கம் மட்டும் தோற்கண் உள்ள இசைக்கருவி
   ________________ .
   ( முரசு, மேளம், உடுக்கு )

8. இதோ ________________ நூல்; படித்துவிட்டுத் தாருங்கள்.
   ( உனது, எனது, தனது )

9. அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு 44 ஆண்டுகள் ஆண்ட மன்னன் ______________ .

( எல்லாளன், சங்கிலியன், கயிலைவன்னியன் )

10. **நொடி :**

ஓடுவான்; பறப்பான்; ஒற்றைக் காலில் நிற்பான். அவன் யார்? ______________ .

( காகம், கொக்கு, கிளி )

11. கடிகாரம் அலறியது. ______________ அவன் படுக்கையில் இருந்து எழுந்தான்.

( அப்போது, இப்போது, எப்போது )

12. கன்னியாய் வெந்நீர்க் கிணறுகள் ______________ .

( ஐந்து, ஏழு, ஆறு )

13. பாலில் உள்ள நீரைப் பிரித்து, பாலை மட்டும் உண்ணும் பறவை ______________ .

( தாரா, வாத்து, அன்னம் )

14. நாங்கள் மறுமொழி ______________ விரும்பினோம்.

( பிடிக்க, கூற, செய்ய )

15. தாய் தன் குழந்தையை உறங்க வைப்பதற்குப் பாடுவது ______________ .

( தாலாட்டுப்பாடல், காதற்பாடல், தொழிற்பாடல் )

16. பலசரக்குகளை வாங்குவதற்காக முதலில் ஆசிய நாடுகளுக்கு வந்தவர்கள் ______________ .

( ஆபிரிக்கர், அமெரிக்கர், ஐரோப்பியர் )

17. நான் நேற்று முழுவதும் வீட்டிலேயே ______________ .

( இருக்கிறேன், இருந்தேன், இருப்பேன் )

18. குழுவிளையாட்டுகளில் ______________ சிறந்த பண்பாகும்.

( விட்டுக்கொடுத்தல், பொறாமைப்படுதல், சினங்கொள்ளுதல் )

19. **குறள் :**

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத்து ______________ அறிவு

( ஊறும், மாறும், தோறும் )

20. தோற்கருவி என்பதைப் பிரித்து எழுதினால் ______________ .

( தோல் + கருவி, தோற் + கருவி, தோற்க் + கருவி )

21. பல்துலக்க உதவுவது ______________ .

( பூவரசங்குச்சி, மாங்குச்சி, வேப்பங்குச்சி )

22. தாளுண்ட நீரைத் தலையாலே தருவது ______________ .

( வாகை, தென்னை, வேம்பு )

23. குதிரை வண்டி கற்பாதையில் ______________ என ஓடியது.
( படபட, மடமட, கடகட )

24. **ஒலிவட்டு :**
வியர்வையைப் போக்க உதவுவது ______________.
( காற்றாடி, கிலுகிலுப்பை, ஓலை )

25. கோடைகாலத்தில் குடையைப் போல நிழல் தருவது
______________.
( கமுகுமரம், பனைமரம், ஆலமரம் )

26. பறவைகள் ______________ கூடு கட்டின.
( மரத்தில், மரத்தை, மரத்துக்கு )

27. புடவியின் வெப்பம் ______________ அதிகரித்துச் செல்கிறது.
( படிப்படியாக, மேடும் பள்ளமுமாக, சாரிசாரியாக )

28. **பழமொழி :**
தன்பலம் கொண்டு அம்பலம் ______________.
( ஏறக்கூடாது, ஏறவேண்டும், ஏறவேண்டாம் )

29. அக்காவும் தம்பியும் தொலைக்காட்சி ______________.
( பார்க்கிறாள், பார்க்கிறான், பார்க்கின்றார்கள் )

30. பள்ளி + பாடம் என்பதைச் சேர்த்து எழுதினால்
______________.
( பள்ளிற்பாடம், பள்ளிபாடம், பள்ளிப்பாடம் )

புள்ளிகள் 30

2) **கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| சுடச்சுட | குறுகுறு | ஊண்உறக்கம் |
| நினைக்க நினைக்க | திரள்திரளாக | |

1. திருவிழாவிற்கு மக்கள் ________________ ச் செல்கின்றனர்.

2. சேயோனின் தந்தை ________________ இன்றி உழைத்தார்.

3. அம்மா ________________ த் தேநீர் குடித்தார்.

4. நண்பன் கூறிய நகைச்சுவையை ________________ ச் சிரிப்பு வருகிறது.

5. குழந்தை ________________ என்று நடந்து தாயிடம் சென்றது.

புள்ளிகள் 05

## 3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.

1. நீங்கள் ஒற்றுமையாக வேலையைச்

   ________________________________.

2. குந்தவையால் நடனம் ________________________________.

3. **பழமொழி :**

   பூவுடன் சேர்ந்த நாரும் ________________________________ .

4. நேற்று எனது தங்கை பாட்டுப் ________________________________.

5. வேப்பஞ்சாறு பல்லில் உள்ள கிருமிகளை

   ________________________________ .

| புள்ளிகள் 10 |
|---|

## 4) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

உடற்பயிற்சி எமது உடலை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றது. நாம் ஒவ்வொருநாளும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். விளையாட்டுகளும் உடலுக்கு உறுதியைத் தருகின்றன. தமிழர் பல வீர விளையாட்டுகளை விளையாடினர். அவை சிலம்பம், சடுகுடு போன்றவையாகும். அவற்றுள் சடுகுடு விளையாட்டு பகைவர்களிடமிருந்து தப்புவதற்கும் அவர்களை மடக்கிப் பிடிப்பதற்கும் உதவுகின்றது. விளையாட்டுகள் உடலில் நோய்கள் வராது தடுப்பதற்கு உதவுகின்றன. நோய் இன்றி வாழ்ந்தால் நாம் மகிழ்ச்சியாக வாழலாம். இதையே எமது முன்னோர் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனக் கூறியுள்ளனர்.

1. நாம் ஒவ்வொரு நாளும் என்ன செய்தல் வேண்டும்?

________________________________

2. தமிழரது வீர விளையாட்டுகள் எவை?

________________________________

3. சடுகுடு விளையாட்டு எதற்கு உதவுகின்றது ?

________________________________

________________________________

4. உடலில் நோய்கள் வராது தடுப்பதற்கு எவை உதவுகின்றன?

________________________________

5. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனக் கூறியவர் யார்?

________________________________

புள்ளிகள் 10

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பாட்டி | தமிழர் | குழந்தை |
| கொடுப்பார் | தாலாட்டு | |

கதை கூறும் வழக்கம் ________________ பண்பாட்டில் காலங்காலமாக நிலவுகிறது. தாய் தன் மழலைக்காகப் பாடும் ________________ ப் பாடல்களிலும் கதை சொல்லிப் பாடுவாள். நிலவிலே ஔவைப்பாட்டி கூனியபடி நிற்பதாகக் கதை கூறி, வியப்போடு வாய் திறந்து வானைப் பார்க்கும்________________ வாயில் தாய் உணவு ஊட்டுவாள். பிள்ளைகள் முற்றத்து நிலாவொளியில் அமர்ந்திருக்க ________________ வீரதீரக் கதைகளைக் கூறியபடி சோற்றுக் குழையலைக்________________. பிள்ளைகளும் கதையைக் கேட்டபடியே உணவு உண்பர்.

புள்ளிகள் 10

## 6) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. திராவிட மொழிகளின் மூலமொழி எது?

_______________________________________________

_______________________________________________

2. மீன்களில் மிகப் பெரியது எது?

_______________________________________________

_______________________________________________

3. ஈசன் எனப் போற்றப்பட்ட மன்னன் யார்?

_______________________________________________

_______________________________________________

4. தமிழருடைய கொண்டாட்டங்களில் சிறந்தவை எவை?

_______________________________________________

_______________________________________________

5. திருமலைக் கடலில் வந்து கலக்கும் ஆற்றின் பெயர் என்ன?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பழக | வாடாத | அசைகிற |
| பாடி | கடந்து | |

1. சிறுவன் ஆற்றைக் ____________________ சென்றான்.
2. நீங்கள் நன்றாக நீந்தப் ____________________ வேண்டும்.
3. குழந்தைகள் பாடலைப் ____________________ மகிழ்ந்தனர்.
4. காற்றில் ____________________ இலைகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன.
5. அப்பா அங்காடியில் ____________________ காய்கறிகள் வாங்கினார்.

புள்ளிகள் 05

## 8) தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. மாணவர்கள் ____________________
2. தொலைக்காட்சி ____________________
3. மருத்துவமனை ____________________
4. தொடருந்து ____________________
5. செய்தித்தாள் ____________________

புள்ளிகள் 05

9) **தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**



ஒருநாள் வேழனும் வளவனும் காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது......

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| புள்ளிகள் 15 |
|---|